# <u>மயிலாடுதுறை நகராட்சி</u>

## 2018–ம் ஆண்டு ஜுன் மாதம் 13–ந்தேதி புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கை.

**முன்னிலை:– திரு. எம். காந்திராஜ், பி.காம்., எம்.பி.ஏ., தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் (கூ.பொ) மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **13.06.2018** | **1)** தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 124 D & E ன் படி, தொழில் வரியினை 5 ஆண்டிற்கு ஒரு முறை 35% க்கு மிகாமலும் 25% க்கு குறையாமலும் மன்றத்தின் ஒப்புதலுடன் தொழில் வரியினை சீராய்வு செய்ய வேண்டும் என்ற சட்டத்தின் படியும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:12503/2018/ஆர்1,நாள்: 21.05.2018 குறிப்பிட்டுள்ளவாறு 01.10.2018 முதல் தொழில் வரியினை சீராய்வு மேற்கொள்ளவும் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திடவும், ஒரு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திடவும், உரிய செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 276, உட்பிரிவு (2) ல் தொழில் வரி உயர்ந்தபட்ச தொகை ஆண்டிற்கு ரூ2500/– வசூல் செய்யலாம் என உள்ள சட்டத்தின் படி, உயர்ந்தபட்ச தொழில்வரி தொகை ஆண்டிற்கு ரூ.2500/–க்கு மிகாமல் சீராய்வு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u> :** 1. 25ரூ தொழில் வரி சீராய்வு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திடவும் மற்றும் தினசரி நாளிதழில் விளம்பரம் சய்திடவும் ஆகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்:341**<br>அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது |

| வ.எண் | ஆறுமாத மொத்த வருமானம் | பழைய தொழில்வரித் தொகை ரூ. | 01.10.2018 முதல் நிர்ணயம் செய்ய வேண்டிய 25% உயர்வு தொழில் வரி தொகை |
|---|---|---|---|
| 1 | ரூ.21000–வரை | இல்லை | இல்லை |
| 2 | ரூ.21001 முதல் ரூ.30000 வரை | ரூ.120/– | ரூ.150/– |
| 3 | ரூ.30001 முதல் ரூ.45000 வரை | ரூ.295/– | ரூ.369/– |

| | | | |
|---|---|---|---|
| 4 | ரூ.45001 முதல் ரூ.60000 வரை | ரூ.590/– | ரூ.738/– |
| 5 | ரூ.60001 முதல் ரூ.75000 வரை | ரூ.880/– | ரூ.1100/– |
| 6 | ரூ.75001க்கு மேல் | ரூ.1175/– | ரூ.1469/–(இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 276, உட்பிரிவு (2) ல் தொழில் வரி உயர்ந்தபட்ச தொகை ஆண்டிற்கு ரூ2500/– ஆகும். எனவே அரையாண்டு தொழில்வரி ரூ,1250/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது) |

ந.க.எண் : 1846/2018/அ3

| | | |
|---|---|---|
| | **2)** மயிலாடுதுறை நகராட்சியில் கொசு தடுப்பு பிரிவு பணியாளராக பணிபுரிந்து வந்த திரு. K. பெருமாள் என்பவர் **30.06.2018** அன்று ஓய்வு பெறுவதை முன்னிட்டு அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் தொகைக்கான பங்குத்தொகை ரூ.10,000/–ஐ நகராட்சி பொது செலவு நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.002507/2018/பி2. | **தீர்மான எண்:342**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | **3)** மயிலாடுதுறை நகராட்சியில் கொசு தடுப்பு பிரிவு பணியாளராக பணிபுரிந்து வந்த திரு.K.அறிவழகன் என்பவர் **30.06.2018** அன்று ஓய்வு பெறுவதை முன்னிட்டு அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் தொகைக்கான பங்குத்தொகை ரூ.10,000/–ஐ நகராட்சி பொது செலவு நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.002382/2018/பி2. | **தீர்மான எண்:343**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | **4)** மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட **36** வார்டுகளிலும் **2018–2019**–ம் ஆண்டிற்கு சொத்துவரி, தொழில்வரி, வரியில்லா இனம் ஆகியவற்றினை கேட்பு அறிவிப்பு, படிவம் அச்சடித்து பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**4.00** இலட்சத்திற்கு பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு: 2672/2018/அ1 | **தீர்மான எண்:344**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | **5)** இந்நகராட்சியில் **2018–2019**ஆம் ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான படிவம் மற்றும் பதிவேட்டு பொருட்களை கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து நேரடியாக வாங்கிக்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.10,00000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் சென்ற நிதியாண்டில் கோயமுத்தூர் கூட்டுறவு நிறுவனத்திடம் இருந்து படிவங்கள் மற்றும் பதிவேடுகள் பெறப்பட்டன எனவே தொடர்ந்து மேற்படி கூட்டுறவு அச்சகத்திடம் நடப்பு நிதியாண்டிற்கும் படிவம் மற்றும் பதிவேடுகள் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண் 2620/2018 /பி3 | **தீர்மான எண்:345**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **6)** இந்நகராட்சியில் 2018–2019ஆம் ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான கணினி பொருட்களை கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து நேரடியாக வாங்கிக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.10,00000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் சென்ற நிதியாண்டில் கோயமுத்தூர் கூட்டுறவு நிறுவனத்திடம் இருந்து படிவங்கள் மற்றும் பதிவேடுகள் பெறப்பட்டன எனவே தொடர்ந்து மேற்படி கூட்டுறவு அச்சகத்திடம் நடப்பு நிதியாண்டிற்கும் படிவம் மற்றும் பதிவேடுகள் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.2621/2018/பி3 | **தீர்மான எண்:346**<br><br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | **7)** இந்நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN-82-A-0658 எண்ணுள்ள ஆணையர் ஈப்பு வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.25,000/– ஆகும். இதனை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொண்டிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந..க.எண்.2159/2018/இ1. | **தீர்மான எண்:347**<br><br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **8)** இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட **08.05.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்:348**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |

| வ எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| பாதாள சாக்கடை திட்ட நிதி | | | | | |
| 1. | இந்நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN 51 **P** 0798 JET ROD வாகனத்திற்கு தகுதி சான்று பெறத்தக்க வகையில் பழுது நீக்கம் செய்யும் பணி | **90,000** | குரு ஆட்டோ கேரேஜ்,தஞ்சாவூர் | ரூ.99,500<br>(+) 10.55 %<br>அதிகம் | **பாபுலர் ஆட்டோ கேர், மயிலாடுதுறை** |
| | | | **பாபுலர் ஆட்டோ கேர், மயிலாடுதுறை** | ரூ.89,950<br>(-)0.05 %<br>குறைவு | |

அலுவலககுறிப்பு. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: **6**ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண். 1252/2018/இ1**

349

**9)** இந்நகராட்சி பொது திட்ட நிதியின்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 06.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| பொது நிதி | | | | | |
| 1. | ஒக்கி புயலால் பாதிப்படைந்த இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகளை சீர்செய்யும் பணி. | 5,90,000/- | கு.சசிராணி | ரூ. 514539 (-) 0.45 % குறைவு | கு.சசிராணி |
| | | | S.**சீனிவாசன்** | ரூ. 521820 (+)0.96% அதிகம் | |
| 2. | இந்நகராட்சி ஆணையர் ஈப்பு வாகன எண். **TN-82-A-0658** பழுதுநீக்கம் செய்யும் பணி | 25,000/- | இளங்கோ ஆட்டோ மொபைல்ஸ் | ரூ. 24800 (-)0.00 % குறைவு | இளங்கோ ஆட்டோ மொபைல்ஸ் |
| | | | அமரன் ஆட்டோ ஒர்க்ஸ் | ரூ. 25700 (+) 3.63 % அதிகம் | |

அலுவலககுறிப்பு.

பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்.** 2234/2018/E1

**தீர்மான எண்:349**

ஏற்றுக்கொள்ளப்பட்டது

10) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற ஆய்வு கூட்ட அறிக்கை நாள்:28.03.2018ன்படி மயிலாதுறை நகராட்சியில் கீழ்கண்ட திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணிகள் விபரம் | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.7 திம்மநாயக்கன் படித்துறையில் நுண் உயரி கிடங்கு அமைக்கும் பணி | 58.00 |
| 2. | வார்டு எண்18, சமுதாய கூடத்தில் நுண் உயிரி கிடங்கு அமைக்கும் பணி | 62.00 |
| 3. | வார்டு எண்31 வண்டிப்பேட்டையில் நுண் உயிரி கிடங்கு அமைக்கும் பணி | 58.00 |
| 4. | நகராட்சி உரக்கிடங்கில் சுற்று சுவர் அமைக்கும் பணி | 62.00 |
| 5. | 44 Nos Battery Operated வாகனம் வாங்குதல் | 79.20 |
| 6. | 6 Nos Light Commercial வாகனம் வாங்குதல் | 33.60 |
| | கூடுதல் | 352.80 |

மேற்கண்ட 6 பணிகள் ரூ.352.80 லட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை மேற்கொள்ள தூய்மை இந்தியா திட்டதின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கிட வேண்டி கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு
அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது.

அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1634/2018/இ1

**தீர்மான எண்:350**

ஏற்றுக்கொள்ளப்பட்டது

| | | |
|---|---|---|
| | 11) இந்நகராட்சி பகுதியில் ஒக்கி புயலால் பாதிப்படைந்த சாலைகளை சீரமைத்திட SDRF திட்டத்தின் Damages caused due to ockhi cyclone and incessant rain – 2017-ன்கீழ் ரூ.5.90 (லட்சம்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பழுதான சாலைகள் Patch work பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br><br>ந.க.எண்.2234/2018/இ1. | **தீர்மான எண்:351**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | 12) இந்நகராட்சியின் சார்பில் தமிழக அரசின் ஓர் ஆண்டு சாதனைமலர் தினபூமி சிறப்பு மலரில் வெளியிடப்பட்டதற்கு விளம்பரக்கட்டணம் ரூ.21,000/– (இருபத்தி ஓராயிரம் மட்டும்) பட்டியல் எண்.70006. நாள்.11.05.2018–ல் கோரி உள்ளார். எனவே மேற்படி தொகையினை தினபூமி நாள் இதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து தினபூமி நாள் இதழுக்கு செலுத்தவும் ஆணையர் அனுமத்திக்கு பின்னேற்பு வழங்கலாம்.<br><br>ந.க.எண்.2486/2018/இ1 | **தீர்மான எண்:352**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | 13) மயிலாடுதுறை நகராட்சியில் தினசரி உருவாகும் திடக்கழிவுகளை ஆங்காங்கே சரிவர கையாண்டு பயனுள்ள வகையில் உரமாக மாற்றிடும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படி இந்நகராட்சி பூங்காங்களில் ON SITE COMPOST PLANT அமைத்திட ஏதுவாக 1. வரதாச்சாரியார் பூங்கா, 2.ஹாஜியார் நகர் பூங்கா, 3. குமரன் பூங்கா ஆகியவற்றில் ON SITE COMPOST PLANT கட்டமைப்பு அமைத்திட ஆகும் உத்தேச செலவீனம் ரூ.4.50 லட்சம் (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 2774/2018/இ1. | **தீர்மான எண்:353**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | 14) மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் contrution of bus shelter at G.H. Road in ward No.9-ல் பணி மேற்கொள்ளப்பட்ட போது மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் bus shelter அமைக்கப்பட்ட இடத்தில் கூடுதலாக Drain with cover slab facility அமைக்க அறிவுறுத்தியதன் பேரில் இப்பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ.60000/– (அறுபது ஆயிரம் மட்டும்) ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இப்பணியினை அதே விலைவிகிதத்தில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.002770/2018/இ1. | **தீர்மான எண்:354**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 15) மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.18–ல் உள்ள நகராட்சி பாரதி நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைந்துள்ள இடத்தினை சுற்றி சுற்று சுவர் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க தேவையான மதிப்பீடு தொகை ரூ.150000 (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் குடிநீர்திட்ட நிதியிலிருந்து மேற்கொண்டிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.3796/2018/இ1. | **தீர்மான எண்:355**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | 16) மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்கு நகராட்சி பராமரிப்பில் உள்ள சிறுமின்விசை பம்புகள் மற்றும் இந்தியா மார்க்–II பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடன் சீர்செய்திட ஏதுவாக ஜுன்–2018 முதல் மே 2019 வரை ஓர் ஆண்டுக்கு பழுது நீக்கம் செய்யும் பணியினை ரூ. 10.00 (பத்து லெட்சம்) மதிப்பீட்டில் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் செலவீனத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.002767/2018/இ1. | **தீர்மான எண்:356**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | 17) மயிலாடுதுறை நகராட்சி திம்மநாயக்கன் படித்துறை மிகவும் சிதலமடைந்துள்ளது. மேலும் மீன் மார்கெட்டில் ஏற்ப்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்திட தேவையான மதிப்பீட்டு தொகை ரூ.190000/– (ஒரு லட்சத்து தொன்னூறு ஆயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்ப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.2771/2018/இ1. | **தீர்மான எண்:357**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | 19) மயிலாடுதுறை நகராட்சி ஆனதாண்டவபுரம் சாலையில் அமைந்துள்ள இந்நகராட்சி உரக்கிடங்கில் குவிந்துள்ள குப்பைகளை நவீன முறையில் மறு சுழற்சி செய்திட ஏதுவாக 110KW மின்மாற்றி அமைத்து தர மின்சார வாரியத்திற்கு விண்ணப்பம் வழங்கப்பட்டது. இதனை பரிசீலித்த மின்சாரவாரியம் விண்ணப்ப கட்டண தொகையாக ரூ.6250/–ஐ செலுத்தும்படி அறிவுறுத்தியுள்ளது. இத்தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வைப்புத்தொகை ரூ.6250/–ஐ செயற்பொறியாளர் நாகப்பட்டினம், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்களுக்கு நேரடியாக செலுத்துவதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.2707/2018/இ1. | **தீர்மான எண்:358**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |

359

20) மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உறவினர்களற்ற அனாதையாக கிடக்கும் பிணத்தை அரசு மருத்துவமனை பிண அறையிலிருந்து எடுத்து சென்று நல்லடக்கம் செய்ய இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு, ஒரு பிணத்திற்கு ரூ. 200/– வீதம் வழங்க 2018–2019 ஆம் ஆண்டிற்கு உத்தேச செலவினத்தொகை 50000/– (ஐ;ம்பதாயிரம்)–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 161/2018/எச்2.

**தீர்மான எண்:359**

ஏற்றுக்கொள்ளப்பட்டது

21) இந்நகராட்சி பொதுநிதி , குடிநீர் திட்ட நிதி மற்றும் பாதாள சாக்கடை திட்ட **நிதி** யின்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 08.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| பொது நிதி | | | | | |
| 1. | வார்டு எண்.31 தரங்கை சாலையில் புதியதாக கட்டப்பட்டுள்ள யாத்திரிகர் தங்கும் விடுதிக்கு சுற்று சுவர், இதர பணிகள் அமைக்கும் பணி. | 9,50,000/- | **A.**சட்டையப்பன் | **ரூ.78,83,85.25** (-)0.07% குறைவு | **A.**சட்டையப்பன் |
| | | | G.**ச**ம்மந்தம் | **ரூ. 78,99,17.30** (+) 0.1% அதிகம் | |
| 2. | வார்டு எண். 1 முதல் 36 வரை பொது மற்றும் சமுதாய கழிப்பறைகளை பழுது நீக்கம் செய்யும் பணி. | 12,00,000/- | **E.**கண்ணன் | **ரூ.10,45,502,12** (-) 0.064% குறைவு | **E.**கண்ணன் |
| | | | **M.**காந்தி | **ரூ. 10,48,818.36** (+) 0.25 % அதிகம் | |
| 3. | இந்நகராட்சி வரிவசூல் மையத்திற்கு புதியதாக 10 எண்ணிக்கையில் பேட்டரிகள் வாங்கும் பணி. | 40,000/- | **E.**கண்ணன் | **ரூ.39,950 .00** (-) 0.0% குறைவு | **E.**கண்ணன் |
| | | | **A.** சட்டையப்பன் | **ரூ. 41,500.00** (+) 3.88 % அதிகம் | |

**தீர்மான எண்:360**

ஏற்றுக்கொள்ளப்பட்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | மயிலாடுதுறை நகராட்சி பராமரிப்பில் உள்ள நெ.2 ரோட்டில் அமைந்துள்ள காந்தி மண்டபம் அருகில் இயங்கி கொண்டிருந்த சங்கினை பழுது நீக்கம் செய்யும் பணி. | 45,000/- | G.இளஞ்செழியன் | ரூ.44,500.00 (-) 0.0% குறைவு | G.இளஞ்செழியன் |
| | | | S.கலியபெருமாள் | ரூ. 46,000.00 (+) 3.37 % அதிகம் | |
| 5. | குடிநீர் திட்ட நிதி | | | | |
| | வார்டு எண். 21 அறுபத்துமூவர் பேட்டை வடக்கு தெருவிற்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி. | 30,000/- | E.கண்ணன் | ரூ.24,090 (-) 0.32% குறைவு | E.கண்ணன் |
| | | | M.காந்தி | ரூ. 24,390 (+) 0.93 % அதிகம் | |
| 6. | பாதாள சாக்கடை திட்ட நிதி | | | | |
| | வார்டு எண்.29, ஸ்ரீநகர் காலனியில் ஒரு எண்ணிக்கை Manhole அமைத்து ஏற்கனவே உள்ள Manhole க்கு இணைப்பு செய்திடும் பணி. | 80,000/- | E.கண்ணன் | ரூ.68,674.73 (-) 0.17% குறைவு | E.கண்ணன் |
| | | | M.காந்தி | ரூ.68,938.93 (+) 0.16 % அதிகம் | |

அலுவலககுறிப்பு.

பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்.** 0827/2018/E1

# மயிலாடுதுறை நகராட்சி

**2018–ம் ஆண்டு ஜுன் மாதம் 28–ந்தேதி வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கை.**

**முன்னிலை:– திரு. எம். காந்திராஜ், பி.காம்., எம்.பி.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் (கூ.பொ)**
**மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **28.06.2018** | 1) இந்நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 27.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்:361** ஏற்றுக்கொள்ளப்பட்டது |

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| பொது நிதி | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பொதுசுகாதாரப்பிரிவில் குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்படும் டம்பர் பிளேசர் வாகனம் என். TN51R 2111-க்கு புதிய டயர்கள் 6(ஆறு) எண்ணிக்கை விநியோகம் செய்தல் | 75,000/- | திருமலர் டயர்ஸ் சீர்காழி. | ரூ. 75200/– அதிகம் | திருமலை டயர்ஸ் 14/4. வள்ளலார் கோயில் மேற்கு தெரு, மயிலாடுதுறை. |
| | | | திருமலை டயர்ஸ் மயிலாடுதுறை. | ரூ. 74300/– குறைவு | |

அலுவலககுறிப்பு : பட்டியலில் கண்டுள்ள கலம் எண்.6–ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்.** 757/2018/எச்1

**2)** இந்நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 27.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்:362**

ஏற்றுக்கொள்ளப்பட்டது

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| பொது நிதி | | | | | |
| 1. | பொதுசுகாதாரப்பிரிவில் குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்படும் டம்பர் பிளேசர் வாகனம் என். TN51S 5143-க்கு பழுதுநீக்க பணிகள் மேற்கொள்ளுதல் | 75,000/- | பாப்புலர் ஆட்டோகேர் மயிலாடுதுறை | ரூ. 75,000/- குறைவு | பாப்புலர் ஆட்டோகேர் மயிலாடுதுறை. |
| | | | குரு ஆட்டோ கேரேஜ் தஞ்சாவூர். | ரூ. 78,000/- அதிகம் | |

அலுவலககுறிப்பு : பட்டியலில் கண்டுள்ள கலம் எண்.6–ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்.** 1094/2018/எச்1

**தீர்மான எண்:363**

ஏற்றுக்கொள்ளப்பட்டது

**3)** இந்நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 27.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| பொது நிதி | | | | | |
| 1 | பொதுசுகாதாரப்பிரிவில் குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்படும் டிப்பர் லாரி வாகனம் என். TN51S 5146-க்கு பழுதுநீக்க பணிகள் மேற்கொள்ளுதல் | **85,000/-** | பாப்புலர் ஆட்டோகேர் மயிலாடுதுறை | **ரூ. 85,000/-** குறைவு | பாப்புலர் ஆட்டோகேர் மயிலாடுதுறை. |
| | | | குரு ஆட்டோ கேரேஜ் தஞ்சாவூர். | **ரூ. 92,000/-** அதிகம் | |

அலுவலககுறிப்பு : பட்டியலில் கண்டுள்ள கலம் எண்.6–ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்.** 2026/2018/எச்1

**தீர்மான எண்:364**

ஏற்றுக்கொள்ளப்பட்டது

**4)** மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதாரபிரிவு திரு.முகம்மது சித்திக் என்பவர் தொடர்ந்த சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். W.P.No.12642 of 2018 தொடர்பாக திரு.K. புவனேஸ்வரி கூடுதல் அரசு வழக்கறிஞர் உயர்நீதிமன்றம் சென்னை அவர்களுக்கு வழக்கு செலவினத்தொகை ரூ.15000/–ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2804/2018/எச்2.

| | | |
|---|---|---|
| | **5)** மயிலாடுதுறை நகராட்சி பகுதிகளில் அனுமதியற்ற மனைப்பிரிவுகளை முறைபடுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது கடித ந.க.எண்.60978/2014/TP3. நாள். 07.06.2018. செயல்முறைகள்படி, இந்நகராட்சி முக்கிய பகுதிகளில் பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் சிறப்பு முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு கூட்டம் நடத்தியும், விளம்பர பலகைகள், துண்டு பிரசுரங்கள் மற்றும் ஆட்டோ விளம்பரங்கள் போன்ற பணிகள் மேற்கொள்ள ரூ.1,00,000/—(ஒரு லட்சம் மட்டும்) உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.2864/2017/எப்1. | **தீர்மான எண்:365**<br><br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **6)** நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.60978/2008/டிபி3. நாள். 26.06.2018–ந்தேதிய கடிதத்தில் மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள பூங்காக்கள், விளையாடுமிடங்கள் மற்றும் காலியிடங்கள் முதலியவற்றை வேலி அமைத்து (Barbed wire fencing) பராமரித்திடவும் செய்யப்படும் செலவினத்திற்கு தன்னார்வ தொண்டு நிறுவனம், தனியார் மற்றும் பொதுத்துறை வணிக நிறுவனங்கள், CSR நிதி மற்றும் நகராட்சி பொதுநிதியிலிந்து மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வேலி அமைக்கப்படும் பூங்காக்களை புகைப்படம் எடுத்து ஆவணப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எளவே மேற்படி பூங்கா, விளையாடுமிடம், காலியிடம் (Barbed wire fencing) முதலியவற்றிற்கு வேலி அமைத்திட செய்யப்படும் செலவினத்திற்கு தன்னார்வ தொண்டு நிறுவனம், தனியார் மற்றும் பொதுத்துறை வணிக நிறுவனங்கள், CSR நிதி மற்றும் நகராட்சி பொதுநிதியிலிந்து மேற்கொள்ள மன்ற அனுமதி அளிக்கலாம். மேலும் மேற்படி பூங்காக்கள், விளையாடுமிடங்கள் மற்றும் காலியிடங்கள் முதலியவற்றை போட்டோ எடுப்பதற்கும் மற்றும் Autocad மூலம் ஆவணப்படுத்துவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 (இரண்டு லட்சம்)–த்திற்கு மன்ற அனுமதி அளிக்கலாம்.<br><br>அலுவலககுறிப்பு: 1. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அறிவுரையின்படி மேற்படி போட்டோ எடுக்கும் செலவினத்திற்கும், ரூ.2.00 (இரண்டு லட்சம்)–த்திற்கு மன்றம் அனுமதி வழங்கலம்.<br>2. பூங்கா, விளையாடுமிடம், காலியிடம் முதலியவை சுற்றுவேலி (Barbed wire fencing) அமைத்திட தன்னார்வ தொண்டு நிறுவனம், தனியார் மற்றும் பொதுத்துறை வணிக நிறுவனங்கள்,CSR நிதி மற்றும் நகராட்சி பொதுநிதியிலிந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண். 976/2018/எப்1. | **தீர்மான எண்:366**<br><br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |